2023 அக்டோபர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.*

திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கிட்டத்தட்ட 50,000-க்கும் மேற்பட்ட ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகள் இருக்கின்றன. அந்தப் பகுதியினுடைய மக்கள் பிரதான தொழிலாக ஆடுகளை மேய்த்து வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு கால்நடை மருத்துவமனை இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பதிலிலும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் கால்நடை கிளை நிலையங்கள், கால்நடை மருந்தகங்களை அமைக்க கோரிக்கை விடுத்தவண்ணம் உள்ளார்கள். துறையின்மூலம் அவற்றை ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, நிதிநிலைக்கேற்ப அதற்கான நடவடிக்கைகளை துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 226, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

226—

படகுக் குழாம்

***7868—திரு. ஜோசப் சாமுவேல்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளை தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் சென்னை மாநகர மக்களின் குடிநீர் ஆதாரமாகப் பயன்பட்டு வருகின்றன. இந்த ஏரிகளில் ஆழம் குறைவாக உள்ளது. ஏரிகளின் நீர்மட்டம் ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆகையால், இங்கே படகுக் குழாம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜோசப் சாமுவேல் அவர்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உங்கள் தொகுதியில் முதல்வர்' திட்டத்தின் மூலமாக அம்பத்தூர் தொழிற்பேட்டை மேனாம்பேடு பகுதிகளில் மின் நிலையம் அமைக்கவும், மேம்படுத்தவும், அதேபோல தொகுதி முழுவதும் புதை மின்வடக் கம்பிகள் அமைக்கவும், அம்பத்தூர் OT பகுதி வரை metro rail போக்குவரத்தை விரிவுபடுத்தவும் மற்றும் சென்னை பாடி முதல் திருநின்றவூர் வரை சாலையை விரிவுபடுத்தவும், இரயில்வே மேம்பாலம் அமைக்கவும், சுமார் 1,824.30 கோடி ரூபாய் ஒதுக்கி, பணிகளை எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பத்தூர் ஏரி மற்றும் கொரட்டூர் ஏரிகளைத் தூய்மைப்படுத்தி படகுக் குழாம் அமைக்க மறுபரிசீலனை செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னை மக்களின் குடிநீர் தேவைக்காக அந்த ஏரியைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். குடிநீர் தேவைக்காக அந்தப் பகுதியில் இருக்கின்ற புழல் ஏரியில்தான் நீர் தேக்கப்படுகின்றது. இந்தப் பகுதியில் உள்ள இரண்டு ஏரிகளும் எந்தவித பயன்பாட்டுக்கும் இல்லாத அளவில் இருக்கின்றன. அதேபோல ஏரியின் ஆழம் குறைவாக உள்ளது என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள்.

2023 அக்டோபர் 11]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்விக்கு வாருங்கள்.

திரு. ஜோசப் சாமுவேல்: அரசாணை எண் 290–ன்படி, பொதுப் பணித் துறை 23–11–2020–ல் ரூ.23 கோடிக்கு அந்த ஏரியை ஆழப்படுத்துவதாக அறிவித்துள்ளது. அதன்மூலமாக, ஏரியை ஆழப்படுத்தி, தண்ணீர் நிரப்பி சுற்றுலா சேவை அளிக்க மறுபரிசீலனை செய்ய முடியுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகள் நீர்வளத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த ஏரிகளை மாசுபடாமல் பாதுகாப்பது குறித்து தேசிய பசுமைத் தீர்ப்பாய வழக்குகளின் வழிகாட்டுதலின்படி, நீர்வளத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் ஏரிகளில் படகுக் குழாம் அமைப்பது குறித்து நீர்வளத் துறையின் தடையின்மைச் சான்று பெறப்படுமாயின், அங்கு படகுக் குழாம் அமைப்பது குறித்து துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜோசப் சாமுவேல்: நன்றி. முடியாதபட்சத்தில், இரண்டு ஏரிகளுக்கு நடுவிலே அங்கு பறவைகள் சரணாலயம் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: இல்லை. பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து Forest Department–ல்தான் முடிவு எடுப்பார்கள். வனத் துறையின் கட்டுப்பாட்டில்தான் அவர்கள் இருப்பார்கள். அது முடிந்தபிறகு, சுற்றுலாத் துறையின்மூலம் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்கி எனது வால்பாறை தொகுதி அமைந்துள்ள வால்பாறை மலைப் பகுதியில், அம்மா அவர்களின் கடந்த ஆட்சியிலே படகு இல்லம், தாவரவியல் பூங்கா துவங்கப்பட்டு, நல்லமுறையிலே சுற்றுலாப் பயணிகள் பயன்பெறுகின்ற வகையில் நடைமுறையில் இருந்தது. இப்பொழுது அது பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, தாவரவியல் பூங்கா மற்றும் படகு இல்லத்தை மேம்படுத்தி மீண்டும் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதி ஒரு சுற்றுலாத்தலம். நிச்சயமாக அந்தப் பகுதியில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்து, அப்படி ஏதாவது குறைகள் இருந்தால் அந்தக் குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்து, மேம்பாடு செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.

திருமதி ம. வரலட்சுமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, மறைமலைநகர் நகராட்சிப் பகுதியில் நின்னகரை என்று ஒரு பெரிய ஏரி அமைந்துள்ளது. இந்த ஏரி தொழிற்சாலைக் கழிவுகளால் மாசு அடைந்திருக்கின்றது. எனவே, நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த ஏரியைத் தூய்மைப்படுத்தி படகு வசதி மற்றும் பூங்கா அமைத்துத்தர வேண்டுமென தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற அந்தக் குளத்தை மீண்டும் எங்களது சுற்றுலாத் துறை அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயமாக அவருடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

227—

பேருந்து வசதி

***37927—திரு. வி.பி. நாகைமாலி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினத்திலிருந்து கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் வரை புதிய நகரப் பேருந்தை இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். கேள்வி எல்லாம் முன் வரிசையிலே திரு. வி.பி. நாகைமாலிக்கு ஆதரவாகக் கேட்கிறீர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை நகரப் பேருந்தை இயக்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூட ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். போக்குவரத்துத் துறை அதிகாரிகளுக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். ஆகவே, நீங்கள் நாகப்பட்டினத்திலிருந்து கீழையூர் வரை ஒரு நகரப் பேருந்து இயக்க வேண்டுமென்று தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.*